TNRM100022422025



**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**2026 ம் வருடம் மார்ச் மாதம் 07 ம் தேதி சனிக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.191/2025**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | சிக்கல் காவல் நிலைய குற்ற எண்.52/2025. |
| **எதிரியின் விபரம்** | | |
| 2. | பெயர் | சண்முகவள்ளி |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | முருகேசன் |
| 4. | வயது | 55/2025 |
| 5. | தொழில் | – |
| 6. | முகவரி | 2/100, காமராஜபுரம், கடலாடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். |
| 7. | புகார் தேதி | 28.06.2025 ம் தேதி 10.00 மணி |
| 8. | சம்பவ நாள் | 28.06.2025 ம் தேதி 11.30 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | நிலையப்பிணை (28.06.2025) |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | நிலையப்பிணை (28.06.2025) |
| 11. | கமிட்டல் உத்தரவு | இல்லை |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 28.07.2025 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 03.03.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act ன் கீழ் |

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:11:25 +0530

| | | |
|---|---|---|
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act ன் கீழ் |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | - |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | **சாட்சிகள்** / **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1 / 26.02.2026 / 26.02.2026<br>அ.சா.2 / 26.02.2026 / 26.02.2026 |
| 17. | எதிரியிடம் பிரிவு 351(1)(b) B.N.S.S. Act ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 03.03.2026 |
| 18. | எதிரி தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 19. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. 311 பிரிவின் படியான மனுக்கள் | - |
| 20. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.A.ராஜன் |
| 21. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.M.அழகுமுத்து அரியப்பன் |
| 22. | எதிரியின் கூற்று | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 23. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 07.03.2026 |
| 24. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 07.03.2026 |
| 25. | தீர்ப்பின் முடிவு | முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவு 4(1)(C) TNP |



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:11:33 +0530

| | | |
|---|---|---|
| | | Amendment act 2024-ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை பிரிவு 271(1) B.N.S.S Act-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களான சுமார் 180 ML அளவு கொண்ட மதுவுடன் கூடிய MCLENE BRANDY - 5. BLACK PEARL BRANDY - 2. MENS CLUB BRANDY - 1 லேபில் ஒட்டப்பட்ட மது பாட்டில்கள் - 8 ஆனது இந்நீதிமன்றத்தில் P.R.No.193/2025 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்குச் சொத்தில் உள்ள மதுவினை கொட்டி அழித்து காலி மதுபாட்டில்களை மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் அரசுடமையாக்க உத்தரவிடப்படுகிறது. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக 03.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை - 1 திரு.பி.எம்.முனியாண்டி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.அழகுமுத்து அரியப்பன் அவர்கள் ஆஜராகியும், இந்நாள் வரை இந்நீதிமன்ற

பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

## தீர்ப்புரை

1. இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

2. கடந்த 28.06.2025ம் தேதி காலை 10.00 மணிக்கு எதிரி காமராஜபுரம் கிராமத்தில் உள்ள எதிரியின் வீட்டின் அருகில் எவ்வித அரசு அனுமதியுமின்றி சுமார் 180 மி.லி. அளவுள்ள MCLENE BRANDY - 05, BLACK PEARL BRANDY - 2, MENS CLUB BRANDY - 1 என்ற லேபில் ஒட்டப்பட்ட அரசு மதுபானமான 08 பிராந்தி பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது 28.07.2025ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரி பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி ஆஜரானதன் பேரில் 230 B.N.S.S Act ன் கீழ் குற்றப்பத்திரிக்கை மற்றும் வழக்கின் நகல்கள் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் 12.09.2025ம் தேதியன்று எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் 263(1) B.N.S.S Act-ன்

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:11:49 +0530

கீழ் எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment act 2024-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து 263(2) B.N.S.S Act ன் படி எதிரிக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரி தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு பிரிவு 265 B.N.S.S Act-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் மொத்தம் 3 சாட்சிகள் பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டு கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான காவலர் திரு.ரோசனமேரி என்பவர் அ.சா.1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்த விசாரணை அதிகாரி அ.சா.2 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அரசுத் தரப்பில் அ.சா.ஆ.1 முதல் 4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம் பின்வருமாறு: அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 28.06.2025 ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் சிக்கல காவல் நிலைய அலுவலலில் இருந்த போது சிக்கல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.முத்துக்குமார் என்பவருக்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் பேரில்

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:11:55 +0530

அ.சா.1ம், தன்னுடன் பணியாற்றிய முதல் நிலைக்காவலர் 868 – திருமதி.சோலையம்மாள் அவர்கள் காமராஜபுரம் எதிரியின் வீட்டின் அருகே மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செல்லும் போது எங்களை பார்த்து செல்ல முயன்ற எதிரியை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை செய்ததில் பெயர் விலாசம் கேட்டுக்தெரிந்து கொண்டதாகவும், காமராஜபுரத்தை சேர்ந்த முருகேசன் மனைவி சண்முகவள்ளி என்பவர் எந்தவித அரசு அனுமதியின்றி 180 ML அளவுள்ள மதுவுடன் கூடிய Mic lean Brandy – 5, Black Pearl Brandy – 2, Mens Club Brandy – 1 மொத்தம் 8 பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்தவரை தக்க காரணம் கூறி சார்பு ஆய்வாளர் அவர்கள் கைது செய்து தனிநபர் யாரும் முன்வராதால் எங்கள் இருவரின் முன்னிலையில் காலை 10.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்ததாகவும், அதில் தாங்கள் இருவரும் கையொப்பம் செய்ததாகவும், பின்னர் வழக்கு சொத்துக்களுடன் எதிரியை சிக்கல் காவல்நிலையத்திலிருந்து காலை 11.30 மணிக்கு சிக்கல் காவல் நிலைய குற்ற எண்.52/2025 பிரிவு 4(1)(C) TNP Actன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், அத்தாட்சியிலுள்ள முதல் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 என்றும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மேற்சொன்ன 180 ML அளவுள்ள மதுவுடன் கூடிய Mic lean Brandy – 5, Black Pearl Brandy – 2, Mens Club Brandy – 1 மதுபாட்டில்களை தான் மேற்படி சம்பவ தினத்தன்று எதிரிடமிருந்து கைப்பற்றியதற்கான புகைப்படம் அ.சா.ஆ.2 என்றும், அதன் பிறகு அவரை காவல்

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:12:02 +0530

நிலையத்தில் அழைத்து வந்து முதல் தகவல் அறிக்கை சார்பு ஆய்வாளர் பதிவு செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 28.06.2025ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் சிக்கல் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது தனக்கு கிடைத்த ரகசிய தகவரிலன் பேரில் தன்னுடன் வந்த தலைமை பெண் காவலர் 1814 திருமதி.ரோசனா மேரி மற்றும் முதல் நிலை பெண் காவலர் 868 திருமதி.சோலையம்மாள் ஆகியோர் சகிதம் காமராஜபுரம் கிராமத்தில் உள்ள எதிரியின் வீட்டில் அருகில் ரோந்து சென்றபோது அங்கே சந்தேகப்படும் படியாக நின்ற காமராஜபுரத்தை சேர்ந்த முருகேசன் மனைவி சண்முகவள்ளி என்பவரிடம் சோதனை செய்தபோது அவரிடம் வெள்ளை நிற சாக்கு பையில் 180 ML அளவுள்ள Meclene Brandy என்ற லேபிளுடன் கூடிய 5 மது கண்ணாடி பாட்டில்கள் இருந்ததாகவும், Black Pearl Brandy என்ற லேபிளுடன் கூடிய 2 மது கண்ணாடி பாட்டில்கள் இருந்ததாகவும், Mens Club Brandy என்ற லேபிளுடன் கூடிய 1 மது கண்ணாடி பாட்டில்கள் இருந்தது என்றும், மொத்தம் 8 மதுபாட்டில்கள் இருந்ததாகவும், சம்பவ இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் தலைமை பெண் காவலர் 1814 திருமதி.ரோசனா மேரி மற்றும் முதல் நிலை பெண் காவலர் 868 திருமதி.சோலையம்மாள் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து 8 மதுபாட்டில்களுன் கைப்பற்றி எதிரியையும் கைது செய்ததாகவும், பின்னர் எதிரி சொத்துக்கள் சகிதம் நிலையம் வந்து நிலையக்குற்ற எண்.52/2025 பிரிவுகள் 4(1)(C) TNP Amendment Act 2024ன் கீழ் முதல் தகவல்



SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:12:16 +0530

அறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்ததாகவும், எதிரியை நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்ததாகவும், பின்னர் 8 மதுபாட்டில்களை படிவம் 91 (அ.சா.ஆ.4) மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், சாட்சிகள் தலைமை பெண் காவலர் 1814 திருமதி.ரோசனா மேரி மற்றும் முதல் நிலை பெண் காவலர் 868 திருமதி.சோலையம்மாள் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இத்துடன் தனது விசாரணை முடித்து எதிரி சண்முகவள்ளி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024ன் கீழ் அன்றே குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து எதிரியிடம் பிரிவு 351(1)(b) B.N.S.S. Actன் கீழ் 03.03.2026ம் தேதியன்று வினவிய போது, அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

8. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act-ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் போதுமான சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் தகுநிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:12:21 +0530

**தீர்வு**

9. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் 4 சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின்போது அரசுத்தரப்பு சாட்சிகள் ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை என்பதாலும் அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதம் செய்தார்.

10. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையில், கடந்த 28.06.2025ம் தேதி காலை 10.00 மணிக்கு சிக்கல் காவல் நிலைய போலீஸ் பார்ட்டி சகிதம் காமராஜபுரம் கிராமத்தில் உள்ள எதிரியின் வீட்டில் அருகில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்து வந்தபோது போலீஸ் பார்ட்டியைக் கண்டதும் ஓட எத்தனித்தவரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை செய்தபோது வழக்கின் எதிரி எவ்வித அரசு அனுமதியும் இன்றி சுமார் 180 ML அளவுள்ள MCLENE BRANDY - 5. BLACK PEARL BRANDY - 2. MENS CLUB BRANDY - 1 என்ற லேபில் ஒட்டப்பட்ட அரசு மதுபானமான 8 பிராந்தி

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:12:28 +0530

பாட்டில்களை விற்பனைக்காக ஒரு பையில் வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியை கைது செய்து அந்த இடத்தில் தனி நபர் யாரும் இல்லாததால் உடன் வந்த காவலர்கள் முன்னிலையில் வழக்குச் சொத்துக்களை 10.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியின் பேரில் கைப்பற்றி 11.30 மணிக்கு நிலையம் வந்து எதிரியின் மீது வழக்குப்பதிவு செய்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

11. மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக கையொப்பம் செய்த திரு.ரோசனமேரி என்பவர் அ.சா.1 ஆகவும், விசாரணை அதிகாரி அ.சா.2 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். இவ்வழக்கில் மொத்தம் 3 சாட்சிகள் பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளார்கள். கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிக் கையொப்பம் செய்த மற்றொரு சாட்சியான திரு.சோலையம்மாள் என்பவர் விசாரணை நீதிமன்றத்தில் சாட்சியாக முன்னிறுத்தப்படவில்லை.

12. இவ்வழக்கின் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்த புலன் விசாரணை அதிகாரி மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்த அ.சா.1 யைத் தவிர சம்பவம் நடந்தது உண்மையென நிரூபணம் செய்ய அரசுத்தரப்பில் பொதுஜன சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மேலும், எதிரியின் நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பொது நபர்கள் யாரும் புகார் அளிக்கவில்லை.

13. இவ்வழக்கின் சம்பவ இடம் குறித்து ஆய்வு செய்யும்போது, அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், **"காமராஜபுரம் எதிரியின் வீட்டின் அருகே மதுவிலக்கு**

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:12:34 +0530

**சம்மந்தமாக ரோந்து செல்லும் போது எங்களை பார்த்து செல்ல முயன்ற எதிரியை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை செய்ததில் பெயர் விலாசம் கேட்டுக்தெரிந்து கொண்டோம். காமராஜபுரத்தை சேர்ந்த முருகேசன் மனைவி சண்முகவள்ளி என்பவர் எந்த வித அரசு அனுமதியின்றி 180 ML அளவுள்ள மதுவுடன் கூடிய Mic lean Brandy – 5, Black Pearl Brandy – 2, Mens Club Brandy – 1 மொத்தம் 8 பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்தவரை தக்க காரணம் கூறி சார்பு ஆய்வாளர் அவர்கள் கைது செய்து தனிநபர் யாரும் முன்வராதால் எங்கள் இருவரின் முன்னிலையில் காலை 10.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்தார்."** என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தில் இருந்து சம்பவ இடமானது காமராஜபுரம் கிராமத்தின் அருகே ரோந்து சென்றபோது சந்தேகப்படும் படியாக நின்று கொண்டிருந்த எதிரி ஓட எத்தணித்தபோது பிடித்து எதிரியை சோதனை செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி இடமானது பொது இடமான காமராஜபுரம் கிராமத்தில் உள்ள நபர்கள் யாரையும் பொது ஜன சாட்சியாக இவ்வழக்கில் விசாரணை செய்யவில்லை.

14. மேலும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபாட்டில்களானது எதிரியிடமிருந்துதான் கைப்பற்றப்பட்டது என்பதை நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்கையில், அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து சம்பவ இடத்தில் வைத்துதான் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டது என்பதை நிரூபணம் செய்யும் விதமாக அரசுத்தரப்பில் போட்டோ, வீடியோ எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:12:38 +0530

15. இவ்வழக்கில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் 8 மதுபாட்டில்களானது போதை பொருள் வகையைச் சேர்ந்ததா, அது பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்யும்போது, இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபாட்டில்கள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை பெறப்படவில்லை என்பது ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது.

The Tamil Nadu Liquor (Possession for personal consumption) Rules, 1996 was amended vide G.O.(MS) No.14, H.P. & EVI Department, Dated:09.06.2017 and thereby (1) Indian Made Foreign Spirits – 4.5 (2) Foreign Liquor 4.5 (3) Beer – 7.8. (4) 9.0 Litres Possession of liquor for personal consumption is permitted.

The Hon'ble Madras High Court in Mahalingam Vs. The Additional Superindent of Police and others (W.P.(MD) No.10136 of 2020 dated :15.09.2020 and M.Suriyakumar Vs. The Inspector of Police (Crl.O.P.(MD) No.15677 of 2020, Dated : 23.12.2020 upheld the rules and quashed the cases.

16. இவ்வழக்கின் எதிரி 180 மி.லி. அளவுள்ள லேபில் ஒட்டப்பட்ட 8 மதுபாட்டில்களை வைத்திருந்ததாக எதிரி மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிரியின் கைவசம் உள்ள மதுபாட்டில்களின் அளவானது அரசு நிர்ணயித்துள்ள அளவான 4.5 லிட்டர் அளவை விட குறைவான அளவு என்பதை


SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:12:45 +0530

இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு இவ்வழக்கில் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டினை உறுதிபடுத்த எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் அரசுத்தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியம் மற்றும் அரசுத்தரப்பு ஆவணங்களின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் எழுகிறது.

17. எனவே இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி தான் இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பது குறித்தும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபானங்கள் எதிரியின் கைவசம் இருந்துதான் கைப்பற்றப்பட்டது என்பது குறித்தும், போலீஸ் சாட்சிகளைத்தவிர பொதுஜன சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை என்பதாலும், அரசால் அனுமதிக்கப்பட்ட அளவை விட எதிரி அதிகமாக மதுபானங்களை வைத்திருந்ததாக அரசுத்தரப்பில் எந்தவொரு வாதமும் செய்யப்படாததாலும், எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவு 4(1)(C) TNP Amendment act ன் கீழான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி அரசுத் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

18. முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவு 4(1)(C) TNP Amendment act 2024-ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை பிரிவு 271(1) B.N.S.S Act-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

19. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களான சுமார் 180 ML

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:12:51 +0530

அளவு கொண்ட மதுவுடன் கூடிய MCLENE BRANDY – 5. BLACK PEARL BRANDY – 2. MENS CLUB BRANDY – 1 லேபில் ஒட்டப்பட்ட மது பாட்டில்கள் – 8 ஆனது இந்நீதிமன்றத்தில் P.R.No.193/2025 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்குச் சொத்தில் உள்ள மதுவினை கொட்டி அழித்து காலி மதுபாட்டில்களை மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் அரசுடமையாக்க உத்தரவிடப்படுகிறது.

20. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர், 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ம் தேதி சனிக்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:12:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-**

| **List of Witness** | **Name of the witness** |
|---|---|
| PW1 | ரோசனமேரி |
| PW2 | முத்துக்குமார் |

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:13:33 +0530

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| | | |
|---|---|---|
| Ex.P.1 | 28.06.2025 | அத்தாட்சி |
| Ex.P.2 | 28.06.2025 | 8 மதுபாட்டில்களை காண்பிக்கக்கூடிய புகைப்படம் |
| Ex.P.3 | 28.06.2025 | முதல் தகவல் அறிக்கை |
| Ex.P.4 | 28.06.2025 | படிவம் 91 |

அரசு தரப்பு சான்று பொருள் :- இல்லை

எதிரி தரப்பு சாட்சிகள் :- இல்லை

எதிரி தரப்பு சான்றாவணம் :- இல்லை

எதிரி தரப்பு சான்று பொருள் :- இல்லை

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:13:15 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**குறிப்பு:-**

1. சாட்சிகளின் விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து குற்றமுறையீட்டாளர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 15:13:22 +0530